செ.வெ.எண்:364 நாள்: 18.5.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாய மின் இணைப்புகளில் கூடுதல் மின் பளு தேவைப்படுவோர் தட்கல் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம்.**

**புதுக்கோட்டை மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் த.செந்தில்குமார் அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாய மின் இணைப்புகளில் கூடுதல் மின் பளு தேவைப்படுவோர் தட்கல் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து புதுக்கோட்டை மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் த.செந்தில்குமார் அவர்கள் தெரிவித்ததாவது.

தற்போது பயன்பாட்டிலுள்ள விவசாய மின் இணைப்புகளில் கூடுதலாக மின் பளு தேவைப்படும் விவசாயிகள், தட்கல் புதிய கூடுதல் மின்பளு பெறும் திட்டத்தின் கீழ் விண்ணபத்து கூடுதல் மின்சாரம் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான விருப்பக் கடிதங்களை செயற்பொறியாளர் அலுவலகத்தில் மே 18ஆம் தேதி முதல் ஜூன் 30 ஆம் தேதிக்குள் வழங்கி தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

புதிய விவசாய விண்ணபத்துக்கு கிராம நிர்வாக அலுவலர் சான்று தேவையில்லை. பதிவு மற்றும் செயல்பாட்டுக் கட்டணமாக ரூ.100 மற்றும் ரூ.18 ஜிஎஸ்டி உடன் வசூலிக்கப்படும். ஒவ்வொரு குதிரைத்திறன் கூடுதல் மின்பளுவுக்கும் ரூ.20,000 வீதம் செலுத்தி, பெயர் மாற்றம் தேவையில்லையெனில், தங்களின் தயார்நிலையைப் பிரிவு அலுவலகத்தில் பதிவு செய்து கூடுதல் மின்பளு பெற்றுக்கொள்ளலாம்.

பெயர் மாற்றம் இருப்பின் செயற்பொறியாளர் அலுவலகத்தில் அனுமதி பெற்று, கூடுதல் மின்பளுவுக்கு ஒவ்வொரு குதிரைத் திறனுக்கும் ரூ.20,000 வீதம் பிரிவு அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு புதுக்கோட்டை மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் த.செந்தில்குமார் அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**